மனைப்பிரிவு
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

தென்காசி மாவட்டம்
வீரகேரளம்புதூர் வட்டம்
ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம்
கருவந்தா ஊராட்சி
கருவந்தா கிராமம்.

சர்வே எண்: 378/ 2B, 378/ 3, 379/ 1A மற்றும் 380/ 1A -ல் அமையும்

குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு -1:800

இணையதள விண்ணப்பம் எண்: IF351B93

குறிப்பு:

மனைப்பிரிவு இடத்தின் பரப்பு	-	17671.00 ச.மீ (4.36 ஏக்கர்)
உத்தேச சாலையின் பரப்பு	-	6556.70 ச.மீ
மீதமுள்ள பரப்பு	-	11114.30 ச.மீ

குறைந்த வருவாய் பிரிவினர் வீட்டுமனைகள் பரப்பு (EWS Plots) - 1205.40 ச.மீ (10.84%)

மனைகள்: (மனை எண்: 57 முதல் 75 வரை)

மனுதாரர் உபயோக மனை பரப்பு - 125.90ச.மீ (விற்பனைக்குரியது)

கோரிய மனைகள்	-	79
ஒதுக்கிய மனைகள்	-	75 + மனுதாரர் உபயோகமனை

மனைப்பிரிவின் இடத்தின் எல்கை
நிலையில் உள்ள சாலை
உத்தேச மனைப்பிரிவு சாலை

ஒதுக்கீடுகள்:

பொது ஒதுக்கீடுகள்:

கருவந்தா ஊராட்சி மன்ற பெயரில் தான பத்திர ஆவண எண்: 1780/2023 நாள்: 21.07.2023 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதி

1. உத்தேச மனைப்பிரிவு சாலை	-	6556.70 ச.மீ
2. பூங்கா	-	1220.76 ச.மீ (10.98%)
3. பொது உபயோகம் உள்ளாட்சி (Public Purpose) (A)	-	67.53 ச.மீ (0.61%)
4. பொது உபயோகம் (TANGEDCO) (B)	-	71.20 ச.மீ (0.64%)

கட்டிட வரம்பு : 7.20மீ, 9.00மீ அகல சாலைக்கு 1.50 மீ
: 10.00 மீ அகல சாலைக்கு 3.00 மீ
மூலை முடக்கு : 7.20 மீ 9.00 மீ மற்றும் 10.00 மீ அகல சாலைக்கு 1.50 மீ x 1.50 மீ

நிபந்தனைகள்:

1. அரசாணை நிலை எண் : 71 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் :16.8.2003 -ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.மேலும் சாலைகள் மூலை முடக்கு மற்றும் இதர பொது உபயோகம் ஆகியவற்றின் நிலப்பரப்பினை தலைவர், கருவந்தா ஊராட்சிக்கு தானபத்திரம் மூலம் மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கும் முன் நில ஆர்ஜிதம் ஏதும் இல்லை எனவும், எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் மற்றும் நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை எனவும், தலைவர் கருவந்தா ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதற்கு பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

4. அரசாணை நிலை எண் :181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் : 9.12.2020 -ன் படி தலைவர் கருவந்தா ஊராட்சி அவர்கள் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. இம்மனைப்பிரிவில் அமையும் குறைந்த வருவாய் பிரிவினருக்கான (EWS plots) மனை எண்: 57 முதல் 75 வரை உள்ள மனைகளை மனை உட்பிரிவு (ம) மனை ஒருங்கிணைப்பு செய்தல் கூடாது.

6. மனைப்பிரிவின் ஊடே செல்லும் மின்கம்பி பாதையினை சாலையின் போக்கில், மனுதாரர் தன் சொந்த செலவில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

7. மனைப்பிரிவு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ ஓடை, கால்வாய் போன்ற பொது நீர்வழிப்பாதைகள் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை எனவும், அரசு புறம்போக்கு நிலங்களில் மேற்படி மனைப்பிரிவு அமையவில்லை என்பதையும் தலைவர், கருவந்தா ஊராட்சி அவர்கள் உறுதி செய்து இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

ம.வ/தெமாநஊஅ எண் : **SWP/20 / 2023**

வ

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தென்காசி மாவட்டம்

அளவர்/உதவி வரைவாளர் | வரைவாளர் நிலை III | மேற்பார்வையாளர்/வ.நி II

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Tenkasi
Date:2023.07.26 16:46:28